**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-06032022-4634

Volume: 6

Issue: 3

Month: January

Year: 2022

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 19.10.2021

Accepted: 03.12.2021

Published: 01.01.2022

Citation:
Mathi, Gandhi. "Structure of Palai Thinai." *Shanlax International Journal of Tamil Research,* vol. 6, no. 3, 2022, pp. 175–79.

DOI:
https://doi.org/10.34293/tamil.v6i3.4634

*Corresponding Author:
rgmathi1979@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Structure of Palai Thinai

**Gandhi Mathi**

http://orcid.org/0000-0002-8598-5261

**Abstract -** Ancient Tamil literature mentions land-based land discrimination. The ancient Tamil grammar book Tolkappiyam introduces four types of lands. Tolkappiyar introduces the Palai as the Naduvan Thinai and leaves without giving any land to it. Of the four lands, Kurinji, Mullai, Marutham, Neithal Palai, Kurinji land and Mullai land have been cited as the Palai in the dry ecological literature due to lack of water in summer. This review article examines the structure of the Palai.

**Keywords:** Tholkappiyam, Kurinji, Mullai, Marutham, Neithal, Palai, Ecological Literature.

**References**

1. Tolkappiyam. 2007. *Porulathigaram*, Chennai, Sharda Pathipagam.
2. Irunguru Nooru Moolamum Uraiyum. 2010. Chennai, Sharda Pathipagam.
3. Silappathikaram Moolamum Uraiyum. 2007. Chennai, Sharda Pathipagam.
4. Kurunthogai Moolamum Uraiyum. 1957. Chennai, Kazhaka, Vezhiyeedu.
5. Akananooru Moolamum Uraiyum. 1953. Chennai, Kazhaka Vezhiyeedu.
6. Nambiyagapporul. 2012. Chennai, Saratha Pathipagam.

# பாலைத் திணையின் அமைப்பு

*காந்திமதி*

***ஆய்வுச் சுருக்கம்***

*பண்டைத் தமிழ் இலக்கியங்களில் திணை அடிப்படையிலான நிலப் பாகுபாடு குறிப்பிடப்பட்டுள்ளது. பண்டைத் தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியம் நான்கு வகையான நிலங்களை அறிமுகம் செய்கிறது. பாலைத் திணையினை நடுவண் திணை என அறி முகம்செய்து அதற்கு நிலம் கூறாமல் தொல்காப்பியர் விட்டுள்ளார். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் நான்கு நிலங்களில் குறிஞ்சி நிலமும் முல்லை நிலமும் கோடைகாலத்தில் நீர் இல்லாத காரணத்தால் வறண்டு இருக்கும் சூழல் இலக்கியங்களில் பாலைத் திணையாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. இவ்வாய்வுக் கட்டுரை பாலைத் திணையின் அமைப்பை ஆராய்கிறது.*

***முக்கியச் சொற்கள்:*** *தொல்காப்பியம், குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, சூழலியல் இலக்கியம்.*

“மாயோன் மேய காடுறை உலகமும்/ சேயோன் மேய மைவரை உலகமும்/வேந்தன் மேய தீம்புனல் உலகமும்/வருணன் மேயப் பருமணல் உலகமும்/முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என/சொல்லிய முறையால் சொல்லவும் படுமே’’ அகத்.5) (தொல்.பொருள். என்னும் தொல்காப்பியச் சூத்திரத்தால் நிலங்கள் நான்கு என்பதை அறிய முடிகிறது. தொல்காப்பியர் “நடுவண் ஐந்திணை நடுவணது ஒழியப் / படுதிரை வையம் பார்த்திய பண்பே”(மேலது. 6) என்று குறிப்பிடுவதால் பாலைத் திணைக்கு நிலம் இல்லை என்பது விளங்கும். சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் காடுகாண் காதை “முல்லையும் குறிஞ்சியும் கோடையில் தன்னியல்பு மாறுவதைப் பாலை என்று குறிப்பிடுகிறது” (41-42) இதனையே பிற்கால இலக்கண நூலார் சுரம் என்று அழைத்தனர். “பாலை நிலத்தில் உள்ள பாலை என்ற பெயருடைய மரம் கோடையிலும் வெப்பத்தைத் தாங்கி வாழக்கூடிய இயல்புடையது. எனவே அதன் பெயரே நிலத்திற்கும் ஆயிற்று” என்று ஐங்குறுநூறு உரை பாலை என்னும் பெயருக்கு விளக்கம் தருகிறது. (ஐங்குறுநூறு மூலமும் உரையும், என்சிபிஎச், ப.701)

## பாலைக்குரிய முதல் பொருள்

முதல் கரு உரி என்னும் பொருள்கள் நிலம் மற்றும் நிலம் சார்ந்த பொருள்களைக் கட்டமைக்க உதவுவனவாகும். தொல்காப்பியர் முதல் பொருளை நிலம், பொழுது ஆகியவற்றின் இயல்பு என்று கூறி முதல் பொருள்களை இரண்டாக வகைப்படுத்துவார். நிலமும் பொழுதும் உயிர்கள் தோன்றுவதற்கும் வளர்வதற்கும் காரணமாக அமைபவை. ஆதலால் நிலமும் பொழுதும் முதல் பொருள்களின் வகைகளாகக் கூறப்பட்டன. முதல் பொருள்களை அடிப்படையாகக்கொண்டு தோன்றுவன கருப்பொருள்கள். கருப்பொருள்களைக்கொண்டே திணை முழுமையும் கட்டமைக்கப்படுகிறது. அங்கு வாழும் மக்களுடைய ஒழுக்கமே உரிப்பொருள் ஆகிறது. பாலைத் திணைக்கு உரிய முதல் பொருள்களாக வறண்ட நிலமும் வறட்சிக்குரிய பொழுதுகளும் அமைகின்றன. முல்லைக்கு உரிய நிலமாக சுரமும் சுரம் சார்ந்த இடங்களும்அமைகின்றன. பின்பனி இளவேனில் முதுவேனில் என்பன பெரும் பொழுதுகளாகவும் நண்பகல் சிறுபொழுது ஆகவும் அமைகிறது.

### கருப்பொருள்

கருப்பொருள் என்பது நிலத்தாலும் காலத்தாலும் தோன்றும் பொருள்களைக் குறிக்கும் அவ்வகையில் பாலைக்கு உரிய கருப்பொருள்கள் குறிஞ்சிக்கு உரியனவாகவும் முல்லைக்கு உரியனவாகவும் அமைந்திருக்கின்றன. இரு திணைகளிலும் உள்ள கருப்பொருள்கள் வறட்சியின் காரணமாக அழகிழந்து காணப்படும். நம்பி அகப்பொருள் இலக்கணம் பாலைக்கு உரிய கருப்பொருள்களை அறிமுகம் செய்கிறது.

நம்பியகப்பொருள் கருப்பொருள்களை விளக்கும் நூற்பாவில் "கொற்றவை, விடலை, காளை, மீளி, எயிற்றி, எயினர், எயிற்றியர், மறவர், மறந்தியர், புறா, பருந்து, எருவை, கழுகு, செந்நாய், குறும்பு, கூவல், குராஅம், மராஅம், உழிஞ்சில், பாலை, ஓமை, இருப்பை, பாலை யாழ், பஞ்சு ரப்பண், சூறையாடல் என்பனவற்றைக் கருப்பொருள்களாக எடுத்துக் காட்டுகிறது. (நம்பி. 21)

### உரிப்பொருள்

பாலைக்கு உரிய உரிப் பொருளாகப் பிரிதலும் பிரிதல் நிமித்தமும் அமைகின்றன. இந்த உரிப் பொருளையே பாலைத் திணைப் பாடல்கள் ஆழமான நோக்கில் இயற்கைக் கட்டமைப்போடு பதிவு செய்துள்ளன.

### முப்பொருள் கட்டமைக்கும் பாலை

பாலைத் திணைக்கு உரிய முதல், கரு, உரிப் பொருள்கள் பாலைத் திணையைக் கட்டமைப்பதில் சிறப்பிடம் பெறுகின்றன. குறிஞ்சி நிலமும் முல்லை நிலமும் பசுக்களைக் கவர்தல், பசுக்களை மீட்டல் என்னும் இரண்டு ஒழுக்கங்களைக் கூறியவை. இயல்பாக, குறிஞ்சி மற்றும் முல்லை நிலத்தில் வாழக்கூடிய மக்கள் உடல் கட்டு வலிமையாக அமையப் பெற்றவர்கள். எனவே இரு நிலத்தைச் சார்ந்தவர்களுக்கும் நடைபெறக்கூடிய சண்டையில் வலிமை முக்கியத்துவம் பெறுகிறது. பசுக்களைக் கவரச் செல்லக்கூடிய வெட்சியார்களுக்கும் மீட்கச் செல்லும் கரந்தையார்களுக்கும் நடைபெறக்கூடிய போர் சுரம் சார்ந்த சூழலில் நடைபெறுகிறது. ஏனெனில் புறப்பொருளில் வெட்சித் திணையில் சுரம் துய்த்தல் என்னும் துறை உண்டு. இத்துறையில் பசுக்களைக் கவர்ந்த வெட்சி வீரர்கள் பசுக்களுக்குத் துன்பம் ஏற்படாதவாறு வழிநடத்திக் கொண்டு வருவார்கள் இதனையே சுரம் துய்த்தல் என்னும் துறை விளக்கும். குறிஞ்சி நிலத்துக்கும் முல்லை நிலத்துக்கும் பொதுவானதாகச் சுரம் என்னும் சொல் பாலைத் திணையில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. வலிமை இழந்த விலங்குகள், ஆறலைக் கள்வர்கள் அச்சம் தரத்தக்க சூழல்கள், கழுகு, வல்லூறு முதலான பறவைகள் எனப் பாலை நிலச் சூழல் அச்சம் மிக்கதாக எடுத்துக்காட்டப் பட்டிருக்கிறது. குறிப்பாகப் பாலை நிலத்தில் வாழக்கூடிய ஆறலைக் கள்வர்கள் பிறரைத் துன்புறுத்தி வழிப்பறி செய்து வாழ்பவர்கள். அவர்கள் உயிர்களைக் கொல்வதற்கு அஞ்சாதவர்கள் என்னும் செய்திகள் இலக்கியம் மூலம் தெளிவுபடுகின்றன.

ஆறலைக் கள்வர்கள் கானக வழியில் வழியில் வருவோரின் பொருள்களைக் கொள்ளை கொள்ளும் இயல்புடையவர்கள், அவர்கள் "வெம்மை உடைய பாறையில் ஏறித் தங்களின் அம்புகளைத் தீட்டிக் கூர்மைப் படுத்துவர்" (குறுந்.12) "அவ்வாறு தீட்டிய அம்பினைத் தம் விரல் நகத்தால் வருடிக் கூர்மையைச் சோதிப்பர்" (குறுந்.16) "வழிப்போக்கர்கள் வரும் வழியில் தங்கி இருந்து அவர்களின் மேல் அம்பெய்து கொன்று அவர்தம் பொருளைக் கொள்ளை கொள்வர்" (குறுந்.283) "இறந்தவர்களின் உடல்களைக் கல்வைத்து மூடி அதன் மேல் கற்களைக் குவித்து வைப்பர்" (குறுந்.272, 297) குறுந்தொகை தரும் மறவர்கள் குறித்த செய்திகள் அவர்களின் மனநிலை, இரக்கம்

இல்லாப் பண்பு முதலானவற்றை அறிந்து கொள்ள உதவுகின்றன.

பாலை நிலத்தில் ஆண்கள் வேட்டையாடுதல் முதலான தொழில்களைச் செய்ய அந்நிலப் பெண்கள் இல்லறத்தில் இருந்து தமக்கேற்ற இல்லறப் பணிகளை மேற்கொண்டனர். பாலை நிலப் பெண்களின் வாழ்க்கை முறையினைப் பெரும்பாணாற்றுப்படை எடுத்துரைக்கின்றது. "பாலை நிலப் பெண்கள் எயிற்றியர் என்னும் பெயரால் அழைக்கப்பட்டனர். அவர்கள் பகல் வேளையில் எறும்புப் புற்றுகளை உடைத்து அதில் உள்ள புல்லரிசியை எடுத்து வந்து வளர்ப்பு மான் கட்டப்பட்டிருக்கும் விளா மரத்தின் நிழலில் உள்ள நில உரலில் இட்டு உலக்கையினால் குற்றித் தூய்மைப்படுத்திக் கிணற்று நீரைக்கொண்டு சமைத்து உப்புக் கண்டத்துடன் உண்ணுவர்; விருந்தினர்களுக்கும் அதனையே உணவாக வழங்குவர்" (பெரும்பாண்.89- 105)

பாலை நில மக்கள் மலை நெல் அரிசியுடன் உடும்புக்கறியினையும் உணவாகக் கொண்டனர். (மேலது. 130-132) பாலை நில மக்கள் கொற்றவையை வணங்கினர். கொற்றவை போருக்குரிய தெய்வமாகக் கொள்ளப்பட்டது. இவர்களின் வழிபாட்டு முறை குறித்து மு.சண்முகம்பிள்ளை பின்வருமாறு குறிப்பிடுவர். "பாலை நில மக்கள் நடுகல்லையும் இறந்தாரையும் புதைத்து வைத்த பதுக்கைகளிலே உள்ள தெய்வங்களையும் வழிபடுவர். பதுக்கையிலுள்ள கடவுளை வழிபடுவதற்கு அங்குள்ள நடுகல்லுக்குப் பீலி முதலியன சூட்டித் துடியை அடிப்பர். நெல்லால் ஆகிய கள்ளையும் செம்மறிக் குட்டியையும் பலியாகக் கொடுப்பர்" (மு.சண்முகம்பிள்ளை, மு.கு.நூ.ப.69).

### சுரம்

பாலை சுரம் என்னும் பெயரால் அழைக்கப்படுகிறது ஐங்குறுநூற்றுப் பாடல்களில் "அருஞ்சுரம்" (ஐங்.301,303, 307,314,329,331) "வியன் சுரம்" (306) "வெஞ்சுரம்" (309) "பாலை வெங்காடு" (317,320), "மரம் முளி கானம்" (319) "நிலம் காய் கானம்" (321) "கள்ளி அம் கடம்" (323, 334) "வேய் உயர் சுரன்" (327), "காடு" (328,335) "வெயிற்கடம்" (330) "சுரன்" (336,338) என்றவாறாகப் பாலைநிலம் குறித்த பெயர்கள் காணப்படுகின்றன. பாலை அருஞ்சுரம் என்று அழைக்கப்படுவதற்கான காரணத்தை "கோடை வெயில் தாக்குதலில் பாறைகளும் பரல்களும் செம்மையேறி நடத்தற் கருமை தோன்றுதலானும் நீரும் நிழலும் அருகுவதனாலும் புலி முதலிய கொடு விலங்குகள் இடையூறுகளாலும் துன்பம் நிறைந்தமையின் அருஞ்சுரம் ஆயிற்று" (ஐங்குறுநூறு மூலமும் உரையும், என்.சி.பி.எச். ப. 662) என்று விளக்கம் தருவர். வெஞ்சுரம் என்பதற்கான மற்றோர் விளக்கமும் கவனிக்கத் தக்கது. "வேனில் திங்களாவன கோடைப் பருவம் நிகழும் மாதங்களாகும். கோடைப் பருவத்தில் காலையும் மாலையும் கூட நண்பகல் போல் வெம்மை மிக்கு இருத்தல் ஆதலாலும் சோலைகள் வாடியும் குளம் குட்டைகள் வறண்டும் உலகம் அழகிழந்து பயனும் இழந்துபோகும் ஆதலானும் வெஞ்சுரம் எனப்பட்டது" (மேலது. ப.680) வழிநடைப் பயணிகள் நடத்தற்கு இயலாமல் கடுமையான வெயில் இருப்பதன் காரணமாக நிழல் இல்லாத காரணத்தால் "வெள்ளோத்திர மலர்களைத் தலையில் அணிந்து செல்லும் காட்சி எடுத்துக் காட்டப்பட்டுள்ளது" (ஐங்.31) "சுர வழி மக்கள் வேறு ஊர்களுக்குப் பயணிக்கும் வழியாகவும் பொருள் தேடச் செல்லும் வழியாகவும் இருந்தது. அவர்கள் சென்ற காட்டு வழி காட்டு யானைகள் அலையும் வழிகளை உடையதாகவும் கற்கள் நிரம்பியதாகவும் இருந்தது என்று அறிய முடிகிறது''(ஐங். 304)

குறிஞ்சி, முல்லை நிலங்களே பாலையாகத் திரிபு பெறுகிறது என்பதற்கான அகச்சான்றும் ஐங்குறுநூற்றின் வழி அறியக் கிடக்கிறது. வேங்கை கொய்யுநர் பஞ்சுரம் விளிப்பினும்

ஆரிடைச் செல்வோர் ஆது நனி வெரூஉம்
காடிறந் தனரே காதலர் நீடுவர் கொல்
என நினையும் என் நெஞ்சே (311)
இப்பாடலுக்கு விளக்கம் கூற வந்த உரையாசிரியர் "குறிஞ்சி நிலத்தே வாழும் குறவர்கள் வேங்கை மலர் கொய்யும்கால் விளையாட்டு நிமித்தமாகக் குறிஞ்சிப்பண் பாடாமல் பாலைக்குரிய பஞ்சுரப் பண் பாடக் கேட்ட வழிப்போக்கர் இனி வருவது பாலை நில வழி போலும் என்று அஞ்சுவர்" (ஐங்குறுநூறு மூலமும் உரையும், முற்குறித்தது, ப.687) என்னும் விளக்கத்தால் கோடை வரும்போது வளமான பகுதியில் பஞ்சுரம் பாடும் வழக்கம் இருந்தமையை அறிய முடிகிறது. "கானகம் மக்கள் வாழும் தகுதி அற்றதாக இருந்தது. கானகம் அச்சம் தரும் தோற்றம் உடையதாய் விளங்கியது" என்று ஐங்குறுநூறு குறிப்பிடுகிறது. (ஐங்.314) நிலவியல் சூழலே கொலை கொள்ளை முதலான செயல்பாடுகளுக்குக் காரணம் ஆகின்றது.
கண்பொர விளங்கிய கதிர் தெறு வைப்பின்
மண்புரை பெருகிய மரம் முனி கானம் (319)
என்னும் அடிகளால் ஐங்குறுநூறு பாலை நிலத்தின் தன்மையை விளக்குகிறது. உரையாசிரியர் "மண்ணில் தோன்றத்தக்க பல தீமைகளும் நிறைந்த பகுதி" (ஐங்குறுநூறு, என்.சி.பி.எச்., ப.706) என்று கூறுவது பாலை நிலத்தில் நிலவிய வறட்சி பல தீய விளைவுகள் நிகழக் காரணமாய் இருந்தமையை அறிவிப்பதாய் அமைகிறது. காட்டு வழி ஓய்வு எடுக்கும் சூழல் அற்றதாய் விளங்கியது. காட்டுத்தீ பற்றிய காரணத்தால் வழிகள் செம்மை உடையதாய்க் காணப்பட்டன. இதனை, "எரி கவர்ந்து உண்ட என்றூழ் நீள் இடை" (324) என்னும் பாடலடி தெளிவுபடுத்தும். "சுர வழி ஆட்கள் புழங்கும் பகுதி அல்ல. அரிதாகவே பயணம் மேற்கொண்டனர். அவர்கள் பயணம் சென்ற காலத்து அச்சம் மிக்கிருந்தது. விலங்குகள் ஆறளைக் கள்வர்களால் உண்டான அச்சம் மக்கள் கடந்து செல்ல அச்சத்தை உண்டாக்கிய தன்மையை இலக்கியங்கள் எடுத்துக் காட்டியுள்ளன." (அகம் - 1) சுரம் பகல் மட்டும் அல்லாமல் இரவிலும் வெம்மை. குறையாத இயல்பு உடையது. இதனைக் "கல்காய் கடம்" (334) என்னும் தொடரால் அறியலாம். பகலில் வெயிலில் காய்ந்த கற்களும் பாறைகளும் இரவிலும் வெப்பத்தை வெளியிடும் தன்மை உடையவை. அதன் காரணமாகப் பாலை வழியில் இரவும் வெப்பம் உடையதாக இருந்தது.

பாலை நிலம் சுரம் என்று இலக்கியப் பாக்களின் வழி குறிப்பிடப்படிருக்கிறது. குறிஞ்சியும் முல்லையும் திரிந்த நிலம் சுரம் - பாலை இது குறிஞ்சி, முல்லை இரண்டு, தன்மைகளையும் இரண்டன் பொருள்களைக்கொண்டும் சிறக்கிறது. கோடைக்காலத்தில் நிலவும் உயரிய வெப்பம், மரம், செடி கொடிகளுக்கும் அஃறிணை உயிர்களுக்கும் உயர்திணை உயிர்களுக்கும் சகிக்க இயலாததாக ஆகிறது. மனிதனின் மனம் கடும் வெப்பம், நீரற்ற சூழல் உணவின்மை முதலான காரணங்களால் குணத்திரிபு பெற்று உணவுக்காகப் போராடும் சூழலைப் பாலை நிலத்தில் ஏற்படுத்துகிறது. இதன் வெளிப்பாடே கொலை, ஆறளைத்தல் வழிப்பறி, வேட்டை என்னும் செயல்பாடுகளாகும். பிற நிலங்களில் நிகழும் ஒழுக்கங்களில் இருந்து முற்றிலும் மாறுபட்ட நிலையில் பாலைத் திணையின் பொருள் அமைப்பும் சூழல் அமைப்பு அமைந்திருக்கிறது.

## துணைநூற் பட்டியல்


1. தொல்காப்பியம் பொருளதிகாரம். 2007. சென்னை: சாரதா பதிப்பகம்
2. ஐங்குறுநூறு மூலமும் உரையும். 2010. சென்னை:சாரதா பதிப்பகம்.
3. சிலப்பதிகாரம் மூலமும் உரையும். 2007. சென்னை:சாரதா பதிப்பகம்.
4. குறுந்தொகை மூலமும் உரையும். 1957. சென்னை: கழக வெளியீடு.
5. அகநானூறு மூலமும் உரையும். 1953. சென்னை: கழகம்.
6. நம்பியகப்பொருள். 2012. சென்னை: சாரதா பதிப்பகம்.